**வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் டிசம்பர் மாதம் 24.12.2024-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் விபரம்:**

**முன்னிலை:திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி**
**நகர்மன்ற தலைவர்**

**பொருள்: 1**

நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் நகராட்சி அலுவலகம் முன்புறம் பயணிகள் நிழற்குடை அமைக்க உத்தேசமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சம் செலவில் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.33, நாள்.23.05.2022-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு நாள்.01.07.2022 அன்று வழங்கப்பட்டு பணி நடைபெற இருந்த நிலையில் மேற்படி பணியானது நகராட்சி அலுவலகம் முன்புறம் வருவதால் நல்லமுறையில் மாடலாக அமைக்க பொது நல ஆர்வலர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரின் கோரிக்கையை ஏற்று புதிய மாதிரியாக Stainlees Steel கொண்டு முழுவதும் கண்ணாடி மறைப்பு மற்றும் கூரை கொண்டு அமைக்கப்பட்டது. மேற்படி பணிக்கு செலவினம் ரூ.1311190/-தொகை ஆகும். ஏற்கனவே நகர்மன்றம் தீர்மானம் எண்.33, நாள்.23.05.2022-ல் ரூ.9.90 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. கூடுதலாக ஏற்பட்ட செலவின தொகை ரூ.322300/-யினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1422 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் அமைந்துள்ள சிறுவர் பூங்கா பகுதியில் கழிவுநீர் கால்வாய்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால் கழிவுநீர் கால்வாயினை சீரமைத்து தரக்கோரி அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற தலைவர், பொறியாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள் நேராய்வு செய்ததில் கழிவுநீர் கால்வாயினை உடனடியாக சீரமைக்க வேண்டி அறிவுரை வழங்கியதின் பேரில் கழிவு நீர் கால்வாயினை சீரமைக்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சம் செலவுத்தொகை ஆகும். மேற்படி பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கடந்த 24.12.2023 அன்று பணி உத்திரவு வழங்கி அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் பிரிவு 57(7)ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கும் அதற்கான பட்டியல் தொகை ரூ.5,02,385/- வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1423 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:3**

வால்பாறை நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 27.11.2024 – ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை 28.11.2024 திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 12, Near Karumalai Mariamman Temple of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 2 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 18, Near Pannimedu Hospital of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 3 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 17, Near Gejamudi Division Kulam of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 4 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 1, Waterfall Umandi Mudakku of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 5 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 1, Ottraiadi Bridge Junction of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 6 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 12, Near Temple Akkamalai of Valparai Municipality. | | M/s. RAK Industries | 564825/– |
| 7 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 11, Bus Stop Pachamalai Mel thalam of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 8 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 19, Near Ration Shop Muthumudi of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s RAK Industries | 564825/– |
| 9 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 4, Near Shanthi House Loyarparalai of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |
| 10 | Supply and Erection of Solar LED Light (30 Feet) Pole, 150 W LED - 4 No's, Solar Panel Mv - 4 No's, at Ward No. 16, Near Ramkumar House Sholayar Estate of Valparai Municipality. | 5,65,000 | M/s.SUHAVI Enterpries | 565825/– |
| | | | M/s. RAK Industries | 564825/– |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் RAK Industries நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருந்ததால், அதனை ஏற்று பணிஆணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்:1480/2024/இ1**

**நகர்மன்ற தீர்மான எண்:1424 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:4**

மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் கடித எண். ந.க.எண்:314/அ3/2024, நாள்.12.11.2024–ல் கோரியுள்ளதன்படி வால்பாறை வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையங்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் செயல்பட்டு வருவதால் அக்கட்டிடங்களை இடித்து கட்டிதர கோரியுள்ளார்கள். அதன்

அடிப்படையில் கீழ்கண்ட இடங்களை நேராய்வு செய்ததில் கட்டிடங்கள் நல்ல முறையில் உள்ளதால் கட்டிடங்களை இடிக்காமல் குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் அதற்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யவும் மற்றும் அக்கட்டிடத்திற்கு தேவையான கீழ்கண்ட இடங்களில் உள்ள மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் உள்ள குழந்தைகள் மையம் பராமரிக்கும் பணி | ரூ.8,40,000/- |
| 2 | சோலையார் டேம் பகுதியில் உள்ள குழந்தைகள் மையம் பராமரிக்கும் பணி | ரூ.13,20,000/- |
| 3 | சிவா காபி அருகில் உள்ள குழந்தைகள் மையம் பராமரிக்கும் பணி | ரூ.4,75,000/- |
| 4 | காமராஜ நகர் பகுதியில் உள்ள குழந்தைகள் மையம் பராமரிக்கும் பணி | ரூ.8,40,000/- |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1425அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:5**

நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10-ல் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள கதவு எண்.9977 மற்றும் 9/983 ஆகிய வீட்டின் முன்புறம் உள்ள தடுப்புச்சுவர் மற்றும் படிகட்டுகள் கடந்த நாட்களில் பெய்த கனமழை காரணமாக இடிந்து விழுந்துள்ளது. அதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் தற்பொழுது மீண்டும் பருவமழை தொடங்க உள்ளதால் அதிகமான மண்சரிவு ஏற்படுகிறது. எனவே, அப்பகுதி மக்கள் நகர் பகுதிக்கு செல்ல அருகில் மாற்று நடைபாதை இல்லாத காரணத்தினால் அந்நடைபாதையை சீர்செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,70,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1426அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:6**

நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11-ல் உள்ள கதவு எண். 9/931 காந்திநகர் பகுதியில் கழிவு நீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து கழிவு நீர் அனைத்தும் அருகில் உள்ள வீட்டிற்குள் புகுந்து உள்ளதாலும் அக்கால்வாயின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதால் அப்பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

மற்றும் தற்போது பருவமழை தொடர்ந்து பெய்து வருவதாலும் பொதுமக்கள் அந்நடைபாதையில் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் உள்ள பழுதடைந்த கால்வாய் மற்றும் நடைபாதை சீர்செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,20,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1427 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:7**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படியும் இந்நகராட்சி ODF++ சான்று பெற மூன்றாம் நபர் கள ஆய்விற்கு வருகை தரும் பொழுது நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் அனைத்தும் நல்லமுறையில் இயக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் இந்நகராட்சிக்கு ODF++ சான்று பெறப்பட முடியும். எனவே, நகர் பகுதிகளில் உள்ள கீழ்கண்ட கழிப்பிடங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கதவு, இருக்கைகள், தரைதளம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிகள் அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

1. சிறுவர் பூங்கா
2. கக்கன் காலனி
3. ராஜீவ் காந்தி நகர்
4. வாழைத்தோட்டம்
5. இந்திரா நகர்

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1428 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:8**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படியும் இந்நகராட்சி ODF++ சான்று பெற மூன்றாம் நபர் கள ஆய்விற்கு வருகை தரும் பொழுது நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் அனைத்தும் நல்லமுறையில் இயக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் இந்நகராட்சிக்கு ODF++ சான்று பெறப்பட முடியும். எனவே, நகர் பகுதிகளில் உள்ள கீழ்கண்ட கழிப்பிடங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கதவு, இருக்கைகள், தரைதளம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிகள் அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

1. காந்திசிலை அருகில் உள்ள பொதுகழிப்பிடம்
2. அண்ணா நகர் 72 படி கட்டுகள் அருகில் உள்ள சமுதாய கழிப்பிடம்
3. அண்ணா நகர் முத்துகடை அருகில் உள்ள சமுதாய கழிப்பிடம்
4. மார்க்கெட் பகுதி பொதுகழிப்பிடம்
5. வார்டு எண்:10, வார்டு ஆபிஸ் அருகில் உள்ள லைன் கடை வீதி பொதுகழிப்பிடம்

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1429 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:9**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படியும் இந்நகராட்சி ODF++ சான்று பெற மூன்றாம் நபர் கள ஆய்விற்கு வருகை தரும் பொழுது நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் அனைத்தும் நல்லமுறையில் இயக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் இந்நகராட்சிக்கு ODF++ சான்று பெறப்பட முடியும். எனவே, நகர் பகுதிகளில் உள்ள கீழ்கண்ட கழிப்பிடங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கதவு இருக்கைகள், தரைதளம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ15,10,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிகள் அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அட்டகட்டி, ரொட்டிக்கடை மற்றும் வாட்டர்பால்ஸ் பகுதியில் கழிப்பிடம் சீரமைத்தல் | 7.50 |
| 2. | சோலையார் டேம் பகுதியில் கழிப்பிடம் சீரமைத்தல் | 3.60 |
| 3. | சேடல் டேம், பெரியார் நகர் மற்றும் முருகாளி பகுதியில் கழிப்பிடம் சீரமைத்தல் | 4.00 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்:1971/2024/இ1**

**நகர்மன்ற தீர்மான எண்:1430 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:10**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:03-ல் பாரளை பாறைமேடு பகுதியில் (ரொட்டிக்கடை) -யில் உள்ள குடிநீர் கிணற்றிலிருந்து சுமார் 50-ற்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மழைக்காலங்களில் இக்கிணற்றின் அருகில் உள்ள சிறு ஓடையில் செல்லும் நீரிலிருந்து ஏற்படும் கசிவு நீர் கிணற்றில் கலப்பதுடன், அருகாமையில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரும் அவ் ஓடை வழியாக

சென்று அருகில் உள்ள ஆற்றில் கலக்கிறது. மேலும், மழைநீர் அதிக அளவில் ஓடும்போது கிணற்றின் தடுப்புச்சுவரில் உள்ள துவாரங்களின் வழியே நேரடியாக கிணற்றில் கலக்கின்றது. பொதுமக்கள் பல்வேறு நோய் தொற்றுகளுக்கு உள்ளாவதும் தெரியவருகிறது. எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி கிணற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு தடுப்புச்சுவர் அமைத்தல், பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ9.30இலட்சம் ஆகும். மேற்படி கிணற்றின் சுற்று சுவர்களை சீரமைக்கும் பணிக்கு கடந்த 30.07.2024 ல் பணி ஆணை வழங்கி, இப்பணியினை நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன் பிரிவு எண்:57(7)-ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1431அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:11**

இந்நகராட்சியில் கடந்த 19.12.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் நகராட்சிக்கு சொந்தமான புதுமார்க்கெட் பகுதியில் நாட்டுமருந்து கடை அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் ஏலம் கோரப்பட்டது மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு

| வ.எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் | உயர்ந்தபட்ச ஏலம் ஆண்டிற்கு |
|---|---|---|
| 1. | திரு.E.சதீஷ்குமார் த/பெ.எல்லப்பன், வால்பாறை | ரூ1,02,000/- |
| 2. | திரு.G.பாலவிக்னேஷ், த/பெ.கணேசன், கக்கன் காலனி, வால்பாறை. | ரூ1,00,000/- |

மேற்படி ஏலத்தில் அதிகபட்சமாக தொகை ரூ1,02,000/- வருடத்திற்கு பொது ஏலம் கோரிய திரு.E.சதீஷ்குமார், என்பவரின் ஏலத்தினை ஏற்பது குறித்து.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்:490/2022/அ1**

**நகர்மன்ற தீர்மான எண்:1432அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:12**

வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 45KVA ஜெனரேட்டர் மற்றும் 8KW UPS System -கள் கடந்த ஆறு வருடத்திற்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி

ஜெனரேட்டர் மற்றும் UPS ல் உள்ள Battery காலவதியாகி பராமரிப்பின்றி அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் UPS Battery பழுதடைந்து மின் தடை ஏற்படுவதால் அலுவலகங்களில் பணிகள் தடைபடுவதுடன் கணினிகள் பழுதடையும் நிலையும் உள்ளது. தற்சமயம் வால்பாறையில் மழைகாலம் என்பதால் அடிக்கடி மின் தடை ஏற்படும் நிலை உள்ளது. எனவே, UPS–க்கு 20 எண்ணிக்கையில் 65 AH Battery –கள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ160280 இப்பணியினை அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன் பிரிவு எண்.57(7)–ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1433அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:13**

வால்பாறை நகராட்சி வருவாய் நிதி 2023–24 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 20.09.2023 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | ரொட்டிக்கடை பாரளை பாறைமேடு பகுதியில் கோவிலுக்கு அருகில் படிக்கட்டு மற்றும் நடைபாதை அமைத்தல் | 7,00,000 | திருமதி.K.புஷ்பா ஒப்பந்ததாரர் | 0.07 ம.வி குறைவு |
| | | | திரு.C.வெள்ளச்சாமி ஒப்பந்ததாரர் | 0.52 ம.வி அதிகம் |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட 0.07 சதவீதம் குறைவாக வழங்கிய திருமதி.K.புஷ்பாஅவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கி பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஏற்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1434அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:14**

வால்பாறை நகராட்சி 15வது நிதிக்குழு 2022–23 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 04.10.2024 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில் ) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | Supply and fixing of Baling machine 5hp capacity and flooring arrangement in Valparai municipality | 7,00,000 | Amirtham & Co ஒப்பந்ததாரர் | 0.02 ம.வி குறைவு |
| | | | திரு.அசோக் ஒப்பந்ததாரர் | 0.1.39 ம.வி அதிகம் |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட 0.02 சதவீதம் குறைவாக வழங்கிய M/S Amirtham & Co நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1435 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:15**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 ல் ஸ்டேன்மோர் பகுதியில் நகர்புற துணை சுகாதார நிலையம அமைக்க (National Urben Health Mission ) NUHM – SHS – TN 2023–24 திட்டத்தின் கீழ் அமைக்க ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தேசிய சுகாதார பணி இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 1869/NUHM/SHS/2015 நாள் 03.08.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சுகாதார துறை அளித்துள்ள வடிவமைப்பு வரைபடம் படி பணி நடைபெற்று வருகிறது. பணியானது சமவெளி பகுதியில் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையே மலைபிரதேசபகுதியிலும் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். மலைபிரதேசபகுதியில் பொதுபணித்துறையின் விலைவிரப்படி மதிப்பீடு தொகை மற்றும் கட்டுமான இடத்தின் தன்மையை பொறுத்து .அடித்தள பணிகள் கூடுதலாக உள்ளதாலும் கட்டுமான பணிகளை முழுமையாக முடிக்க அரசு ஒடுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.30.00 இலட்சத்தில் கட்டிட பணியினை முழுமையாக முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பணியானது சுகாதார பணி என்பதால் கட்டிடபணியினை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசமாக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம் ஆகும். இப்பணியினை, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1436 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:16**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 Health Sector National Health ல் முடீஸ் நகர் பகுதியில் 15 வது நிதிக்குழு திட்டம் 2022–23 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் (Health Sector National Health Mission) நகர்புற நர்வாழ்வு மையம் அமைக்க ரூ25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி நடைபெற்று வருகிறது. அப்பகுதியில் ஒதுக்கப்பட்ட இடம் (சுகாதார துறைக்கு சொந்தமாக இடம்) வயல் பகுதியாகும். அப்பகுதியில் வேறு இடம் ஏதுமில்லாத காரணத்தினால் அந்த இடத்தில் கட்ட வேண்டிய சூழ்நிலையில் அப்பகுதியில் கட்ட ஆரம்பிற்கும் முன்பு மண் பரிசோதனை செய்யப்பட்டதில் தனித்தனியாக Column அமைத்து Foundation அமைத்து கட்டடம் கட்ட முடியாத நிலை உள்ளதால் வடிவமைப்பு பெற்று வடிவமைப்பில் உள்ளவாறு அடித்தளம் கட்டிடத்தின் அளவிற்கு தகுந்த மாதிரி வெட்டி எடுத்து Full Raft Foundation அமைத்து கட்டிட பணிகள் நடைபெற்று வருவதால் கட்டிட பணியை முழுமையாக முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பணியானது சுகாதார பணி என்பதால் கட்டிட பணியினை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசமாக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ20.00 இலட்சம் ஆகும். இப்பணியினை, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1437 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:17**

தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்புகள் 2024–25 ன் கீழ் வால்பாறை நகராட்சியில் துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைக்கும் பணிக்கு Smart Board கொள்முதல் செய்ய ரூ11.25 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வருவாய்நிதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| வ.எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செலாளிபாறை கிழக்கு | 2.25 |
| 2. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சிறுகுன்றா எஸ்டி | 2.25 |
| 3. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வில்லோனி எஸ்டி | 2.25 |
| 4. | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உருளிக்கல் யுூபி | 2.25 |
| 5. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வால்பாறை | 2.25 |
| | **மொத்தம்** | 11.25 |

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண் 22109/2024/MA1 நாள் 17.12.2024 ல் மேற்கண்ட பணியின் அவசியம் கருதி வால்பாறை நகராட்சியில் துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 5 எண்ணிக்கையிலான திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைக்கும் பணிக்கு Smart Board கொள்முதல் செய்ய ரூ11.25 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண் 1325/2024/இ1**

**நகர்மன்ற தீர்மான எண்.1438 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:18**

வால்பாறை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிகள் 45 பள்ளிகள் நீண்ட நாட்களாக பராமரிப்பு பணிகள் முறையான மேற்கொள்ளபடாத காரணத்தினால் மிகவும் பழுதடைந்த நிலையிலும் பெரும்பாலான பள்ளிகள் தேயிலை தோட்டங்களில் அமைந்துள்ளதால் அடிக்கடி வனவிலங்குகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதால் பள்ளிகளின் சன்னல், கதவுகள் போன்றவை மிகவும் பழுதடைந்து காணப்படுவதாலும், தொடர்ந்து மழைப்பொழிவு இருந்து வருவதால் பள்ளி கட்டிடங்களின் மேற்கூரைகள் பாதிப்படைந்து மழைநீர் கசிவு ஏற்படுவதால் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு கருதி ரூ4.05 கோடி மதிப்பீட்டில் நகராட்சி வருவாய்நிதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண் 23994/2024/MA1 நாள் 17.12.2024 ல் முதற்கட்டமாக கீழ்கண்ட 11 பள்ளிகளுக்கு மட்டும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள திருத்திய மதிப்பீடுகள் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஆய்வுக்கு பின் திருத்திய மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சி நடுநிலைப்பள்ளி முருகாளி | 9.00 | 7.10 |
| 2. | நகராட்சி நடுநிலைப்பள்ளி சௌளிபாறை கிழக்கு | 18.00 | 14.70 |
| 3. | நகராட்சி துவக்கப்பள்ளி நல்லமுடி | 18.00 | 14.40 |
| 4. | நகராட்சி நடுநிலைப்பள்ளி சிறுகுன்றா எல்.டி | 18.00 | 14.00 |
| 5. | நகராட்சி நடுநிலைப்பள்ளி உருளிக்கல் யூ.டி | 18.00 | 12.00 |

| | | | |
|---|---|---|---|
| 6. | நகராட்சி துவக்கப்பள்ளி வால்பாறை | 18.00 | 16.00 |
| 7. | நகராட்சி துவக்கப்பள்ளி நல்லகாத்து | | |
| 8. | நகராட்சி துவக்கப்பள்ளி லோயர்பாரளை | 18.00 | 14.60 |
| 9. | நகராட்சி துவக்கப்பள்ளி லோயர் ஷேக்கல்முடி | 18.00 | 15.30 |
| 10 | நகராட்சி துவக்கப்பள்ளி அப்பர் பாரளை | 18.00 | 10.20 |
| 11 | நகராட்சி துவக்கப்பள்ளி பன்னிமேடு F | 18.00 | 14.25 |
| | **மொத்தம்** | 171.00 | 133.05 |

மேற்கண்ட பணியின் அவசியம் கருதி வால்பாறை நகராட்சியில் 11 நகராட்சி பள்ளிகளுக்கு மட்டும் பராமரிப்பு பணிகள் ரூ.133.05 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்கலாம்
2. செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண் 313/2022/இ1**

**நகர்மன்ற தீர்மான எண்:1439அனுமதிக்கப்படுகிறது.**

## கூடுதல் மன்றப்பொருள்

**பொருள்:1**

வால்பாறை நகராட்சி சொந்தமான உரக்கிடங்கு மார்க்கெட் மற்றும் கடைவீதி பகுதிகளில் ஈக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் தொற்றுநோய் பரவும் ஆபத்தின் காரணமாக ஈக்கொல்லி மருந்து கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.2.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1440அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:2**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சி மற்றும் குப்பையில்லா நகராட்சி (ODF++) என சான்று பெறவும், மனித கழிவுகளை கையாளும் மனிதர்கள் இந்நகராட்சி பகுதியில் எவரும் இல்லை என சுய அறிவிப்பு செய்ய தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்கொள்ளப்படும் அறிவிப்புகளுக்கும் தோராய செலவின தொகை ரூ.1.00

இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1441 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:3**

வால்பாறை நகராட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் 2022–23 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 10.12.2024 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை 23.12.2024 திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | வால்பாறை நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் பணி (இரு உறை முறை) | ரூ15/ ஒரு சிற்றுண்டிக்கு | திரு S.மகேந்திரன் ஒப்பந்ததாரர் | ரூ15.00 |
| | | | திரு V.தியாகராஜன் ஒப்பந்ததாரர் | ரூ16.00 |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ15.00 வழங்கிய திரு S.மகேந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்:**313/2022/இ1

**நகர்மன்ற தீர்மான எண்:1442 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:4**

வால்பாறை நகராட்சி வருவாய் நிதி 2024–25 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி 18.12.2024 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை 23.12.2024 திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | நடுமலை வடக்கு டிவிசன் செல்லும் பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல்(077013S14) | 18,00,000 (1497313.50) + GST & LWF | திரு.L.ஆண்டரசன் பொடுதாஸ் ஒப்பந்ததாரர் | ரூ1318830.00 + GST & LWF |
| | | | திரு.T.P.ஷாஜீ ஒப்பந்ததாரர் | ரூ1335486.00 + GST & LWF |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.L.ஆண்டரசன் பொடுதாஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:**1891/2023/இ1

**நகர்மன்ற தீர்மான எண்:1443 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:5**

வால்பாறை நகராட்சி வருவாய் நிதி 2024-25 –ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி 18.12.2024 –ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியினை 23.12.2024 திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | நல்லகாத்து சாலை ஓரம் கிலோ மீட்டர் 1/0 கல்வெட்டு அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல்(077015R21) | 9,00,000 (713921.60) + GST & LWF | திருமதி.K.லட்சுமி ஒப்பந்ததாரர் | ரூ715950.00 + GST & LWF |
| | | | திரு.A.ரமேஷ்ராஜ் ஒப்பந்ததாரர் | ரூ713779.00 + GST & LWF |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.A.ரமேஷ்ராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:**1891/2023/இ1

**நகர்மன்ற தீர்மான எண்:1444 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள்:6**

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் சமூக பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் வகையில் இந்திய வனச்சட்டம், தமிழ்நாடு வனச்சட்டம், தமிழ்நாடு தனியார் வனச்சட்டம் போன்ற சட்டங்கள் அமுலில் உள்ள நிலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்திறன் வரைவு அறிக்கை நவம்பர் 29, 2024 அன்று SO.5129(E) குறிப்பிட்டுள்ள வால்பாறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளை நீக்கி இங்கு உள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் வாழ்வாதார பாதுகாக்க மத்திய மாநில அரசுகளை உத்தரவு வழங்க கோரி எங்களது ஆட்சேபனை மற்றும் வேண்டுகோளை இந்நகர்மன்றம் ஒருமனதான தீர்மானம் மூலம் சமர்ப்பித்து நிறைவேற்றுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்:1445 அனுமதிக்கப்படுகிறது.**